S.P. Krishnamoorthy D.R.E.,
98422 97223
93450 97223
97505 30998
SINCE 1978
Nikon
HARISON Photo Products
FLASH & CAMERA SERVICE
All Brand Digital Cameras, Flash, Umbrella Lights & Lens Service Etc.,
52, Elango Nagar, Sathy Road, ( Near Balaji Meter Service),
Gandhipuram Coimbatore - 641 044.
E-mail : nikonflashandcameraservice@gmail.com

RNI (PRGI) No.TNTAM/25/A0208

# உள்ளாட்சி அரசு

தினசரி தமிழ் காலை நாளிதழ்

"இயற்றலும் ஈட்டலுங் காத்தலும் காத்த
வகுத்தலும் வல்ல தரசு" திருவள்ளுவர்

youtube.com/@ullatchiarasu  facebook.com/ullatchi.arasu.5

* COIMBATORE செவ்வாய் ஜனவரி 06 * 2025 * மலர் -1 * இதழ்-219* VOL-1 * ISSUE-219 விலை ரூ.3 * பக்கம் -4

# 10 லட்சம் கல்லூரி மாணவர்களுக்கு இலவச லேப்டாப் வழங்கும் திட்டம்!

## முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைத்தார்!!

சென்னை, ஜன. 6–

சென்னை நந்தம்பாக்கம் வர்த்தக மைய வளாகத்தில் நேற்று மாலை 3 மணியளவில் கல்லூரி மாணவர்களின் திறன் வளர்ச்சி மற்றும் டிஜிட்டல் முன்னேற்றத்திற்காக இலவசமாக 10 லட்சம் மடிக்கணினிகள் வழங்கும் "உலகம் உங்கள் கையில்" என்னும் மாபெரும் திட்டத்தை முதல்வர் ஸ்டாலின் தொடங்கி வைத்தார். இது தமிழ்நாட்டின் மாபெரும் டிஜிட்டல் கனவை நனவாக்கும் வரலாற்றுப் பெருமைகள் சேர்க்கும் மாபெரும் கல்விப் புரட்சித் திட்டம் ஆகும். இது குறித்து அரசு சார்பில் வெளியிடப்பட்டிருக்கும் அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது:

"திராவிட மாடல் அரசு, மாணவர்களின் நலன் மற்றும் முன்னேற்றத்தைக் கருத்தில் கொண்டு தமிழ்ப்புதல்வன் திட்டம், புதுமைப் பெண் திட்டம், முதல் தலைமுறை பட்டமளிப்பு திட்டம், போஸ்ட் மெட்ரிக் உதவித்தொகைத் திட்டம், சமூக நீதி விடுதிகள் போன்ற பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது.

இத்திட்டங்களின் தொடர்ச்சியாக, மாணவர்கள் நவீன உலகின் தேவைகளுக்கு ஏற்ப டிஜிட்டல் திறன் பெற "உலகம் உங்கள் கையில்" என்னும் அறிவூட்டும் கருப்பொருளின் கீழ் கல்லூரியில் பயிலும் மாணவ, மாணவியர்க்கு 20 லட்சம் மடிக்கணினிகள் வழங்கும் திட்டம் செயல்படுத்தப்படும் என முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவித்தார்.

அந்த அறிவிப்பின்படி, இத்திட்டம் மாநிலம் முழுவதும் இரண்டு கட்டங்களாக நிறைவேற்றப்படு கிறது. முதல் கட்டமாக 10 லட்சம் மடிக்கணினிகள் வழங்கும் திட்டத்தின் தொடக்க விழா முதல்வர் தலைமையிலும், துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் முன்னிலையிலும் மாலை 3 மணியளவில் சென்னை நந்தம்பாக்கத்தில் உள்ள சென்னை வர்த்தக மைய வளாகத்தில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் அரசு பொறியியல், கலை மற்றும் அறிவியல், மருத்துவம், விவசாயம், சட்டம், பலவகை தொழில்நுட்பக் கல்லூரி, தொழில்துறைப் பயிற்சி போன்ற அனைத்துத் துறைகள் சார்ந்த மாணவர்களுக்கும் 10 லட்சம் மடிக்கணினிகள் வழங்கப்படுகின்றன. "கல்வி அனைவருக்கும்! உயர்வு ஒவ்வொருவருக்கும்!" என்ற நோக்கத்துடன் தொழில்நுட்ப அறிவியலை வலுப்படுத்த டெல், ஏசர், எச்.பி. போன்ற உலகத் தரமான நிறுவனங்களின் மடிக்கணினிகள் வழங்கப்படுகின்றன. மாணவர்களுக்கு வழங்கப்படும் இந்த மடிக்கணினிகளில் இன்டெல் ஐ3 அல்லது ஏஎம்டி ரைசன் 3 பிராஸசர், 8 ஜி.பி. ரேம், 256 ஜி.பி. எஸ்எஸ்டி ஹார்டு டிஸ்க், விண்டோஸ் 11, மற்றும் பாஸ் லினக்ஸ் இயங்கு தளங்கள், மென்பொருள்கள் முன்னதாக நிறுவப்பட்டுள்ள நிலையில், நடைமுறையில் உள்ள கல்வி மற்றும் திட்டப் பணிகளுக்காக எம்.எஸ். ஆபிஸ் 365 மற்றும் "அறிவைத் தேடும் இளைய தலைமுறைக்குப் புதிய சாளரம்" என அமையும் செயற்கை நுண்ணறிவு மென்பொருளான பெர்ப்ளக்ஸ்சிட்டி புரோவின் ஆறு மாத சந்தாவும் கட்டணமில்லாமல் வழங்கப்பட்டது. ஒவ்வொரு மாணவருக்கும் உயர்தர மடிக்கணினி பையும் வழங்கப்பட்டது.





சென்னை, தீவுத்திடலில் நடைபெற்ற நிகழ்ச்சியில், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறையில் பணிபுரியும் வருவாய் நிருவாகம் மற்றும் பேரிடர் மேலாண்மை ஆணையாக அலுவலர்கள், சார் ஆட்சியர்கள், துணை ஆட்சியர்கள் மற்றும் வட்டாட்சியர்கள் ஆகியோரின் பயன்பாட்டிற்காக 13 கோடியே 73 இலட்சத்து ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டிலான 155 புதிய வாகனங்களையும், தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறை சார்பில் தமிழ்நாடு இணையம் சார்ந்த கித் தொழிலாளர்கள் நல வாரியத்தில் பதிவு பெற்ற 100 தொழிலாளர்களுக்கு மானிய விலையில் (escooter) இஸ்கூட்டர்கள் வழங்கும் திட்டத்தையும் கொடியசைத்து தமிழ்நாடு முதலமைச்சர் மு.கூஸ்டாலின் தொடங்கி வைத்தார்.



திருப்பூர் மாவட்டம், உடுமலை அருகே குடிமங்கலம் மேற்கு ஒன்றியத்தில் தி.மு.க. சார்பில் நடந்த விழாவில் 1000 பேருக்கு நலத்திட்ட உதவிகளை அமைச்சர்கள் மு.பெ.சாமிநாதன், கயல்விழிசெல்வராஜ் ஆகியோர் வழங்கினர். அருகில் தி.மு.க. அமைப்பு செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, ஈஸ்வரசாமி எம்.பி. மற்றும் பலர் உள்ளனர்.



திருச்சியில் மத்திய மந்திரி அமித்ஷா பங்கேற்கும் மோடி பொங்கல் விழாவில், பொங்கல் வைக்கும் பெண்களை படத்தில் காணலாம்.



விக்கிரமசிங்கபுரம் நகராட்சி மலையடிவாரத்தில் உள்ள அனவன் குடியிருப்பு பகுதியில் ஒரு கட்டு கரும்பு ரூ.350–க்கு விற்பனை செய்யப்படுகிறது.

### பணகுடியில் சம்பவம்:

## மூதாட்டி அடித்துக்கொலை!

### மர்ம ஆசாமி வெறிச்செயல்!!

நெல்லை, ஜன.6–

நெல்லை மாவட்டம் பணகுடி தெற்கு ரதவீதியை சேர்ந்தவர் ராமகிருஷ்ணன். இவரது மனைவி ஆவுடையம்மாள்(87). இவர்களுக்கு 3 மகன்களும், ஒரு மகளும் உள்ளனர். இவர்கள் அனைவருக்கும் திருமணமாகி குடும்பத்துடன் தனித்தனியே வசித்து வருகின்றனர். இதனிடையே ஆவுடையம்மாள் மகன்கள் சபரிமலைக்கு மாலை அணிந்து கடந்த 2–ந்தேதி கோவிலுக்கு சென்று விட்டனர். இதனால் ஆவுடையம்மாள் வீட்டில் உள்ள முன் அறையில் தனியாக தூங்கியுள்ளார்.

இதையடுத்து அன்று நள்ளிரவு அங்கு வந்த மர்ம ஆசாமி வீட்டின் அறைக்கதவு திறந்து கிடப்பதை பார்த்து திருடும் நோக்கத்தில் நைசாக உள்ளே நுழைந்துள்ளான். இதை பார்த்த ஆவுடையம்மாள் சத்தம் போடவே அந்த ஆசாமி அவரை தாக்கி கீழே தள்ளிவிட்டதாக தெரிகிறது. இதன் பின்னர் அந்த ஆசாமி அங்கிருந்து தப்பியோடி விட்டான். இந்தநிலையில் காலையில் ஆவுடையம்மாள் மயக்கநிலையில் கிடப்பதை பார்த்த அவரது உறவினர்கள் கட்டிலில் இருந்து விழுந்திருக்கலாம் என நினைத்துள்ளனர். பின்னர் அவரை மீட்டு சிகிச்சைக்காக நெல்லையில் உள்ள ஒரு தனியார் மருத்துவமனையில் சேர்த்தனர். அங்கு மருத்துவர்கள் தீவிர சிகிச்சை அளித்த நிலையில் நேற்று நள்ளிரவு ஆவுடையம்மாள் பரிதாபமாக இறந்தார். மேலும் அவரை மர்ம ஆசாமிகள் தாக்கியிருப்பது மருத்துவர்களின் சிகிச்சையில் தெரியவந்தது. இதுகுறித்து பணகுடி போலீசாருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. அதன்பேரில் போலீசார் ஆவுடையம்மாள் உறவினர்களிடம் விசாரணை நடத்தியநிலையில் அப்பகுதியில் உள்ள சி.சி.டி.வி. கேமராவை ஆய்வு செய்தனர். இதில் மர்ம ஆசாமி ஒருவன் ஆவுடையம்மாள் வீட்டிற்குள் சென்றநிலையில் தப்பியோடுவது தெரியவந்தது.

இச்சம்பவம் குறித்து போலீசார் வழக்குபதிந்து மர்ம ஆசாமியை தேடி வருகின்றனர்.



## திருப்பத்தூரில் 2000 குடும்பத்தினருக்கு வேட்டி, சேலை!

### 2 வது வார்டு நகர மன்ற உறுப்பினர் சீனிவாசன் வழங்கினார்!!

திருப்பத்தூர் ஜன.6

திருப்பத்தூர் அடுத்து இரண்டாவது வார்டு நகர மன்ற உறுப்பினர் குட்டி என்கின்ற சீனிவாசன் தலைமையில் 2000 நபர்களுக்கு வேட்டி சேலை வழங்கியும் மற்றும் விளையாட்டுப் போட்டி நடத்தி பரிசு பொருட்கள் வழங்கினார். திருப்பத்தூர் திமுக நகர மன்ற உறுப்பினர் குட்டி என்கின்ற சீனிவாசன் தலைமையில் சிறப்பு அழைப்பாளராக ஜோலா ர்பேட்டை சட்டமன்ற உறுப்பினர் க தேவராஜ் மற்றும் திருப்பத்தூர் சட்டமன்ற உறுப்பினர் ஏ. நல்லதம்பி,

திருப்பத்தூர் நகர செயலாளர் எஸ். ராஜேந்திரன். திருப்பத்தூர் நகர மன்ற உறுப்பினர் சங்கீதா வெங்கடேசன். மாவட்ட அறங்காவல் குழு தலைவர் சந்திரசேகரன். பொதுக்குழு உறுப்பினர் டி ரகுநாத். செல்வம். வழக்கறிஞர் பாபு. நகர மன்ற உறுப்பினர் வெள்ள ராஜா. ஆசிரியர் ரவி. இரண்டாவது வார்டு பகுதியைச் சேர்ந்த பொதுமக்கள் மற்றும் ஏழை எளிய மக்களுக்காக அனைவரும் பொங்கல் தினத்தன்று புதிய புத்தாடை அணிய வேண்டும் என்ற எண்ணத்தோடு 2000 நபர்களுக்கு வேட்டி சேலை மற்றும் கோலப்போட்டிகள் மற்றும் விளையாட்டுப் போட்டிகள் நடத்தி பரிசு பொருட்களை வழங்கி நன்றி தெரிவித்தனர்.

### சேலத்தில் துணிகரம்:

## துப்பாக்கியுடன் வீடு புகுந்து கொள்ளை முயற்சி!

### மாமனாருடன் சேர்ந்து கைவரிசை காட்ட முயன்ற வாலிபர் கைது!!

சேலம் ஜன .6

சேலம் குகை மாரியம்மன் கோயில் பகுதியைச் சேர்ந்தவர் சாஸ்தா கிருபா (42). சாப்ட்வேர் இன்ஜினியரான இவர், பல்வேறு நிறுவனங்களுக்கு சாப்ட்வேர் தயார் செய்து கொடுத்து வருகிறார். சம்பவத்தன்று இரவு, சாஸ்தா கிருபா, தனது மனைவி கவுரிபிரியாவுடன் வீட்டில் இருந்தார். அப்போது ஹெல்மெட் மற்றும் மங்கி குல்லா அணிந்த படி இரு நபர்கள் வீட்டிற்குள் புகுந்தனர். திடீரென துப்பாக்கி (ஏர்கன்) மற்றும் கத்தியை காட்டிய அவர்கள், வீட்டிலுள்ள பணம் மற்றும் நகை கொடுக்கும் படி மிரட்டினர். இதனால் சாஸ்தா கிருபா, கவுரிபிரியா அதிர்ச்சியடைந்தனர். அதே சமயம், துணிச்சலாக செயல்பட்ட தம்பதியினர், மிரட்டல் விடுத்த இருவரையும் மடக்கி பிடித்தனர். பின்னர், அவர்கள் வைத்திருந்த துப்பாக்கி, கத்தியை பறிமுதல் செய்து ஹெல்மெட் மற்றும் மங்கி குல்லாவை விலக்கி பார்த்தனர். இதில், பணம் பறிக்க வந்தது அதே பகுதியைச் சேர்ந்த ஜெயராமன் (40), அவரது மாமனார் அரியானூரைச் சேர்ந்த மணி என்பது தெரியவந்தது.

இதில் தம்பதியின் பிடியிலிருந்து விலகிய மணி, கண்ணிமைக்கும் நேரத்தில் அங்கிருந்து தப்பியோடி விட்டார். இதுகுறித்து செவ்வாய்பேட்டை போலீ சாருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. அதன் பேரில், விரைந்து வந்த அவர்கள், பிடித்து வைக்கப்பட்டிருந்த ஜெயராமனிடம் விசாரித்தனர். இதில், பணம், நகைளை பறிக்கும் நோக்கில், மாமனாருடன் சேர்ந்து சாஸ்தா கிருபா வீட்டிற்குள் நுழைந்து மிரட்டியது தெரியவந்தது. இதனையடுத்து ஜெயராமனை கைது செய்த போலீசார், அவரிடம் இருந்து ஏர்கன் மற்றும் கத்தியை பறிமுதல் செய்தனர். மேலும் தப்பியோடிய மணியை தேடி வருகின்றனர். சேலத்தில் குடியிருப்புகள் நிறைந்த பகுதியில் வீடு புகுந்து பணம், நகையை பறிக்க முயன்ற சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.



கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் ஆர். காந்தி சென்னை, எழும்பூர், கோஆப்டெக்ஸ் தில்லையாடி வள்ளியம்மை விற்பனை நிலையத்தில் பாரம்பரிய சேலையின் அழகையும், நவீன உடை வசதியையும் ஒருங்கிணைக்கும் வகையில் "Ready to Wear Sarees" இரகத்தினை அறிமுகப்படுத்தினார். இந்நிகழ்வின் போது கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை, அரசு செயலாளர் வே. அமுதவல்லி, , கைத்தறித் துறை இயக்குநர் மற்றும் துறை சார்ந்த அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.



கிணத்துக்கடவு வட்டாரம் வடசித்தூரில் நலம் காக்கும் ஸ்டாலின் மருத்துவ முகாமை தெற்கு மாவட்ட செயலாளர் தளபதி முருகேசன் துவக்கி வைத்து கர்ப்பிணி பெண்களுக்கு மருந்து பெட்டகங்களை வழங்கினார். உடன் கிணத்துக்கடவு மத்திய ஒன்றிய செயலாளர் அல்தாப் உசேன் உட்பட மருத்துவத்துறை அதிகாரிகள் பலர் கலந்து கொண்டனர்.



தருமபுரிமாவட்டம்,தருமபுரிவட்டம்,சோலைக்கொட்டாய்,அரசுமேல்நிலைப்பள்ளியில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறையின் சார்பில் நடைபெற்ற 'நலம் காக்கும் ஸ்டாலின்'என்றமுழுஉடல்பரிசோதனைமருத்துவமுகாமினைமாவட்டஆட்சித்தலைவர்ரெ. சதீஸ், பார்வையிட்டு, மருத்துவ பயனாளி மாற்றுத்திறனாளிகளுக்கு அடையாள அட்டை, சக்கர நாற்காலியை வழங்கினார். உடன் துணை இயக்குநர் சுகாதாரம் இராஜேந்திரன், மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நலஅலுவலர்சு.சரவணன்,, அரசுத்துறை அலுவலர்கள், இந்நாள்,முன்னாள் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், மருத்துவர்கள், செவிலியர்கள் மற்றும் பொதுமக்கள் உடனிருந்தனர்.



# மறைந்த ஈரோடு கிழக்கு சட்டமன்ற உறுப்பினர் திருமகன் ஈ.வெ.ரா.வின் 3-ம் ஆண்டு நினைவு தினம்!

## காங். கட்சியினர் உணர்ச்சிப்பூர்வ அஞ்சலி!!

ஈரோடு, ஜன.6

ஈரோடு கிழக்கு தொகுதியின் முன்னாள் சட்டமன்ற உறுப்பினரான திருமகன் ஈவெராவின் மூன்றாம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு இன்று ஈரோடு மாநகர மாவட்ட காங்கிரஸ் கமிட்டி சார்பில் உணர்ச்சிப்பூர்வ நினைவஞ்சலி செலுத்தப்பட்டது.

ஈரோடு அரசு மருத்துவமனை அருகில் அமைந்துள்ள பெருந்தலைவர் காமராஜர் சிலை முன்பாக திருமகன் ஈவெராவின் திருவுருவப்படம் மலர்களால் அலங்கரிக்கப்பட்டு வைக்கப்பட்டிருந்தது.

ஈரோடு மாநகர மாவட்ட காங்கிரஸ் கமிட்டி தலைவர் திருச்செல்வம் தலைமையில் நடைபெற்ற இந்த அஞ்சலி நிகழ்வில், ஈரோடு கிழக்கு சட்டமன்ற உறுப்பினர் வி.சி.சந்திரகுமார் மற்றும் மறைந்த திருமகன் ஈவெராவின் மகள் சமண்ணா ஆகியோர் கலந்துகொண்டு மலர் தூவி மரியாதை செலுத்தினர். தந்தை பெரியாரின் கொள்ளுப்பேரனும், ஈ.வி.கே.எஸ். இளங்கோவனின் மகனுமான திருமகன் ஈவெரா தொகுதி மக்களிடம் காட்டிய அன்பு மற்றும் அவரது அரசியல் பணிகளை நினைவு கூர்ந்து இந்த நிகழ்வு ஒருங்கிணைக்கப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் காங்கிரஸ் கட்சியின் முக்கிய நிர்வாகிகள், மாவட்டப் பொறுப்பாளர்கள் மற்றும் நூற்றுக்கணக்கான தொண்டர்கள் வரிசையாக நின்று மலர் தூவி அஞ்சலி செலுத்தினர். இளவயதிலேயே மறைந்த திருமகன் ஈவெராவின் நினைவைப் போற்றும் வகையில் நடைபெற்ற இந்த அஞ்சலி நிகழ்வு காங்கிரஸாரிடையே நெகிழ்ச்சியை ஏற்படுத்தியது.

# லாரியில் டீசல் திருடியவர் கைது!

பவானி, ஜன.6

அம்மாபேட்டை அருகே சிங்க ம்பேட்டையை சேர்ந்தவர் யுவராஜ், 35; லாரி டிரைவர். அம்மாபேட்டைமேட்டூர் சாலையில் கொம்பூர் எனும் இடத்தில் லாரியை, நேற்று முன்தினம் இரவு நிறுத்தி விட்டு துாங்கினார்.

அதிகாலை லாரியை எடுக்க வந்த போது, டேங்க் அடியில் டீசல் சிந்தியிருந்தது. சந்தேகமடைந்தவர் டேங்க்கில் அளந்து பார்த்தபோது, 80 லிட்டர் டீசல் திருடப்பட்டது தெரியவந்தது. அம்மாபேட்டை போலீசில் புகார் செய்தார். அப்பகுதி சிசிடிவி கேமரா காட்சிகளை ஆய்வு செய்ததில், பவானி, சித்தாரை சேர்ந்த கார்த்தி, 26, டீசல் திருடியதை கண்டுபிடித்தனர். அவரை கைது செய்தனர்.

# தாராபுரத்தில் த.வெ.க. செயல்வீரர்கள் கூட்டம்!

## செங்கோட்டையன் பங்கேற்பு !!



தாராபுரம், ஜன.6

திருப்பூர்மாவட்டம், தாராபுரம் தமிழக வெற்றி கழகத்தின் திருப்பூர் கிழக்கு மாவட்டம், தாராபுரம்–காங்கயம் செயல் வீரர்கள் கூட்டம் தாராபுரத்தில் நடைபெற்றது.

இந்த கூட்டத்தில் பங்கேற்க வந்த மேற்கு மண்டல அமைப்புச் செயலாளர் செங்கோட்டையன் அவர்களுக்கு, தாவெக வடக்கு ஒன்றிய செயலாளர் ஸ்ரீகாந்த் தலைமையில் கழகத்தினர் உற்சாக வரவேற்பு அளித்தனர்.

தாராபுரம் புறவழிச்சாலை நஞ்சியம்பாளையம் பகுதியில் ட்ரம் செட் மேளங்கள் முழங்க, பட்டாசுகள் வெடிக்க, பூங்கொத்து வழங்கி ரோஜா மாலை அணிவித்து பெண்கள் ஆரத்தி எடுத்து வரவேற்றனர். கழகத் தொண்டர்கள் மற்றும் மகளிர் அணியினர் உள்ளிட்ட 400க்கும் மேற்பட்டோர் இந்த வரவேற்பு நிகழ்ச்சியில் கலந்து கொண்டு உற்சாகம் காட்டினர்.

இந்த நிகழ்ச்சியில் திருப்பூர் கிழக்கு மாவட்ட செயலாளர் யுவராஜ் மகேஷ் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள் பலர் கலந்து கொண்டனர்.

# வி.பி.எல். கிரிக்கெட் போட்டி:

## கிங்ஸ் மேக்கர் அணிக்கு காங். கட்சி சிறுபான்மை துறை மாநில ஒருங்கிணைப்பாளர் சத்தாம் ஹுசைன் டி.ஷர்ட்களை வழங்கினார்!



வாணியம்பாடி, ஜன.6

திருப்பத்தூர் மாவட்டம் வாணியம்பாடி நியூடவுன் பகுதி இசுலாமிய கல்லூரி முன்பாக உள்ள விளையாட்டு மைதானத்தில்

வி.பி.எல் கிரிக்கெட் போட்டி நடைபெற்று வருகிறது.

இப்போட்டியில் மொத்தம் 18 அணிகள் பங்கேற்று விளையாடி வருகின்றனர். இந்த போட்டிகள் 6 வாரம் நடைபெறும்.

இதில் பங்கேற்று உள்ள கிங்ஸ் மேக்கர் அணிக்கு ஊக்குவிக்கும் வகையில் காங்கிரஸ் கட்சி சிறுபான்மை துறை மாநில ஒருங்கிணைப்பாளர் எஸ்.சத்தாம் ஹுசைன் டி.ஷர்ட்களை வழங்கினார்.

நிகழ்ச்சியில் சிறுபான்மை துறை மாவட்ட பொது செயலாளர் தாஜுதீன், மாவட்ட தலைவர் அர்மான், எஸ்.எம். சிக்கந்தர், எஸ்.எம்.ஜலால், ஐ.யூசுப், ஐ.ஜமீர், எஸ்.ஐ.நஜீர் அஹ்மத் உட்பட பலர் உடன் இருந்தனர்.

# அகில பாரத ஐயப்ப மாநாடு; கேரள பந்தள அரண்மனை மகாராஜா பங்கேற்றார்!



சேலம், ஜன.6

சேலத்தில் அகில பாரத ஐயப்ப சேவா சங்கம் சார்பில், கொல்லிமலை ஓம் குருவணம், தத்வமஸி ஞானபீடம் நடத்தும் அகில பாரத ஐயப்ப பக்தர்கள் மாநாட்டில் கலந்து கொண்ட, கேரள பந்தள அரண்மனையின் மகாராஜா ராஜ ராஜ வர்மா கூறும் போது, கேரளாவில் உள்ள பண்டலம் அரண்மனை என்பது, சுவாமி ஐயப்பன் குழந்தை பருவத்தில் இருந்து, மலைக்குச் சென்று முட்டி அடையும் வரை வளர்ந்த இடமாகும், இந்த இடத்தில் ஐயப்பன் பயன்படுத்திய போர்வாள், அவர் குளித்த குளம், அவர் அணிந்திருந்த ஆடைகள்,

இன்னும் பல பொருட்கள் பத்திரமாக காலம் காலமாக பாதுகாக்கப்பட்டு வருவதாகவும், பந்தளம் அரண்மனையில் எதற்கென்று தனி அறை ஒதுக்கப்பட்டு அதில் தினம்தோறும் அப்பொருள்களுக்கு பூஜை செய்து வழிபட்டு வருவதாகவும், மகரஜோதி தினத்தன்று பந்தள மகாராஜா ஐயப்ப சுவாமிக்கு வழங்கிய தங்க அங்கிகளை இங்கிருந்து கொண்டு சென்று தான் ஐயப்பனுக்கு அணிவித்து மகரஜோதி தரிசனம் நடைபெறுவதாகவும், சுவாமி ஐயப்பனை இந்த மகரஜோதி தரிசனத்தன்று, லட்சக்கணக்கான பக்தர்கள் அவர் மீது கொண்டுள்ள பக்தியால் தரிசனம் செய்ய வருகிறார்கள்என்றும், வருகின்றமகரஜோதி தினத்தன்று எல்லாம் வல்ல இறைவன், வாழ்க்கையில் 18 தத்துவங்களை கற்றுக் கொடுத்த ஐயன், சுவாமி ஐயப்பனை தரிசனம் செய்வதற்கு அனைத்து தரப்பு மக்களும் வருகை தர வேண்டும் என பந்தள மகாராஜா கூறினார். மேலும் மாசி மாதம் உத்திர நட்சத்திர தினத்தன்று, பந்தல அரண்மனையில் உள்ள ஐயப்பனுக்கு தங்க அங்கிகள் அணிவிக்கப்பட்டு விஸ்வரூப தரிசனக் காட்சி நடைபெறும் எனவும் இதிலும் பொது மக்கள் கலந்து கொள்ள வேண்டும் என அவர் கூறினார்.

# லாரியின் பின்புறம் இருசக்கர வாகனம் மோதி விபத்துக்குள்ளானதில் இளைஞர் உயிரிழந்தார்!

பரமக்குடி, ஜன.6

ராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி திலகர் வீதியைச் சேர்ந்த பாஸ்கரன் மகன் குமரன் (19). இவர், ஈரோடு பகுதியில் தங்கி மளிகைக் கடையில் வேலை பார்த்து வந்தார். இந்நிலையில், ஈரோடு ஆணைக்கல்பாளையம் சுற்றுவட்டச் சாலையில் வெள்ளிக்கிழமை இரவு இருசக்கர வாகனத்தில் குமரன் சென்றுள்ளார்.

அப்போது முன்னால் சென்ற லாரியின் பின்புறம் எதிர்பாராதவிதமாக குமரனின் இருசக்கர வாகனம் மோதி விபத்துக்குள்ளானது. இதில் குமரன் படுகாயமடைந்தார். அக்கம்பக்கத்தினர் அவரை மீட்டு ஈரோடு அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதித்தனர்.

அங்கு மருத்துவர்கள் பரிசோதித்ததில் ஏற்கெனவே அவர் உயிரிழந்துவிட்டதாக தெரிவித்தனர். இதுகுறித்து ஈரோடு தாலுகா போலீஸார் வழக்குப் பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

...விரைவில்...
உங்கள் உள்ளாட்சி அரசு நாளிதழ்...
அறிவோ ஆன்மீகம் ஜோதிட செய்திகள்.....
வாழ்விலும், தொழிலிலும் உள்ள அனைத்து பிரச்சினைகளில் இருந்து விடுபட்டு வாழ்வில் நிரந்தர தீர்வு காண, "வாழ்வில் வெற்றி பெற்று", "வாழ்வில் மகிழ்ச்சியுடன் வாழ" வழிகாட்டுகின்றார்.
40 ஆண்டுகள் ஆன்மீகம் மற்றும் ஜோதிட பணிகளை செய்து வரும்....
சிவத்திரு. சிவமணி சுவாமிகள்
96593 20245 - 98426 79941
உள்ளாட்சி அரசு நாளிதழ்



# த.வெ.க.சார்பில் வேலுநாச்சியார் பிறந்தநாள் விழா!

ஊத்தங்கரை ஜன:06

கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட செயலாளர் முரளி விஜய் அறிவுறுத்தலின்படி தமிழக வெற்றிக் கழகத்தின் மாவட்ட அலுவலகத்தில் வேலு நாச்சியார் 269 – வது பிறந்த நாளை முன்னிட்டு கிழக்கு மாவட்ட இணை செயலாளர் இரா. தாமோதரன். மாவட்ட பொருளாளர் மணிகண்டன். தலைமையில். இன்று மலர் தூவி மரியாதை செலுத்தப்பட்டது.

இந்த நிகழ்வில் சேலம் மண்டல தகவல் தொழில் நுட்ப அணி இணை செயலாளர் சூர்யா மற்றும் ஊத்தங்கரைசட்டமன்றத்தொகுதி, பர்கூர்சட்டமன்றத்தொகுதி, சேர்ந்த ஒன்றிய செயலாளர்கள், கிளைச் செயலாளர் ஊராட்சி பொறுப்பாளர்கள் மற்றும் அணி பொறுப்பாளர்கள் மற்றும் மகளிர் அணி நிர்வாகிகள் என 200க்கும் மேற்பட்டோர்கலந்து கொண்டு அம்மையார் வேலு நாச்சியார் படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தப்பட்டது.

# சாலை பாதுகாப்பு விழிப்புணர்வு நிகழ்ச்சி!



நல்லம்பள்ளி;ஜன6

தர்மபுரி மாவட்டம் நல்லம்பள்ளி அடுத்துள்ள சேசம்பட்டி பிரிவு சாலையில் சுங்க சாவடி மற்றும் மாவட்ட வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் சார்பாகவும் 37ஆவது சாலை பாதுகாப்பு மாத விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது. இந்த நிகழ்ச்சிக்கு வருகை தந்த மாவட்ட போக்குவரத்து ஆய்வாளர் ராஜேஷ் கண்ணன் வாகன ஓட்டிகள் இ டை யே வி ழி ப் பு ணர்வை ஏற்படுத்தினார். அப்போது தலைக்கவசம் உயிர்க்கவசம், இருசக்கர வாகனம் ஓட்டும்போது அனைவரும் தலைக்கவசம் அணிய வேண்டும், சாலை விதிகளை கடைபிடிக்க வேண்டும், காரில் பயணிக்கும் போது இருக்கை பட்டையை அணிய வேண்டும், பாகல்பட்டி கெங்களாபுரம் சர்வீஸ் சாலையில் எதிர்திசையில் செல்லக்கூடாது என்ற பல்வேறு சாலை பாதுகாப்பு குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்தினார்.நிகழ்ச்சியில் சுங்க சாவடி அலுவலர் ஞானசேகர் மற்றும் 50க்கும் மேற்பட்ட பொதுமக்கள் மற்றும் இருசக்கரவாகன ஓட்டிகள்கலந்து கொண்டனர்.

## பனிப்பொழிவால் விளைச்சல் பாதிப்பு:

# காவேரிப்பட்டணத்தில் தக்காளி விலை உயர்வு!

## 1 கிலோ ரூ.60–க்கு விற்பனை!!

காவேரிப்பட்டணம், ஜன.06

காவேரிப்பட்டணம் சுற்று வட்டார பகுதிகள்,மற்றும் சுற்றுப்புற பகுதிகளில், விளைச்சல் பாதிப்பால் தக்காளி விலை கிலோ ரூ.60 வரை விலை உயர்ந்ததால் பொது மக்கள் கவலையடைந்துள்ளனர்.காவேரிப்பட்டணம்,பையூர், சப்பானிப்பட்டி, ஜெகதாப், போத்தாபுரம் , ஏர்ரள்ளி, திம்மாபுரம், பன்னியள்ளி, மற்றும் காவேரிப்பட்டணம் சுற்றுவட்டார பகுதிகளில் சுமார் 2ஆயிரம் ஏக்கருக்கு மேல், விவசாயிகள் தக்காளி சாகுபடி செய்துள்ளனர். இப்பகுதிகளில் விளையும் தக்காளி சென்னை கோயம் பேடு மார்க்கெட், ஈரோடு, கோவை, கேரளா உள்ளிட்ட பகுதிகளுக்கு விற்பனைக்காக அனுப்பி வைக்கப்படுகிறது. கடந்தாண்டு விளைச்சல் பாதிக்கப்பட்டதால் தக்காளி கிலோ ரூ.80வரையிலும் விற்பனையானது. இதனால், ஓசூர் பகுதி விவசாயிகள் தக்காளி சாகுபடி பரப்பினை அதிகரித்தனர்.இந்நிலையில், கடந்த சில வாரங்களாக தொடர் பனியின் காரணமாக தக்காளி விளைச்சல் பாதிக்கப்பட்டுள்ளது. மேலும் கிருஷ்ணகிரி மாவட்டத்தில் அதிகப்படியான பனியின் தாக்கம் இருப்பதால் தக்காளி செடியில் பூக்கள் கருகும் நிலை ஏற்பட்டுள்ளது. சந்தைக்கு வரத்து குறைந் துள்ளதால்,கடந்தவாரம்முதல்தரம்தக்காளிகிலோரூ.25முதல் ரூ.30வரையிலும், இரண்டாம் தரம் ரூ.20க்கும், மூன்றாம் தரம் ரூ.15க்கும் விற்பனையானது.இந்நிலையில், நேற்று முதல் தரம் ரூ.60க்கும், இரண்டாம் தரம் ரூ.30க்கும், மூன்றாம் தரம் 4 கிலோரூ100 க்கும் விற்பனையானது. தொடர்ந்து தக்காளி படிப்படியாக விலை உயர்ந்து வருவதால் பொது மக்கள் அதிர்ச்சிக்குள்ளாகியுள்ளனர்.

Owned, Printed and Published by N. JAYAPRAKASH printed at Ali Mohamed Sayeed Offset Printers NO.29, V.N. DASS ROAD, BORDER THOTTAM, MOUNT ROAD Chennai 600002.
Published from Old No. 73/C 13 Nagaratchi cleaners colony, Housing unit, south ukkadam Coimbatore641 001. Editor: N.JAYAPRAKASH



சுதந்திரப் போராட்ட வீராங்கனை வீரமங்கை வேலுநாச்சியார் அவர்களின் 296வது பிறந்த நாளினை முன்னிட்டு, சிவகங்கை மாவட்டம், சூரக்குளம் ஊராட்சியில் செய்தி மக்கள் தொடர்பத்துறையின் சார்பில் அமைந்துள்ள வீரமங்கை வேலுநாச்சியார் அவர்களின் நினைவு மண்டபத்தில், வீரமங்கை வேலுநாச்சியார் அவர்களின் திருவுருவச்சிலைக்கு கூட்டுறவுத்துறை அமைச்சர்கே.ஆர்.பெரியகருப்பன் அரசின் சார்பில் மாலை அணிவித்து, மலர் தூவி மரியாதை செலுத்தினார்.



மதுரை மாவட்டத்தில் அவனியாபுரத்தில் நடைபெறவிருக்கும் ஜல்லிக்கட்டு முன்னேற்பாடுமற்றும்பாதுகாப்புநடவடிக்கைகள்குறித்துதொடர்புடையஅலுவலர்களுடன் அமைச்சர் பி.மூர்த்தி தலைமையில் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. மாவட்ட ஆட்சித்தலைவர் கே.ஜே.பிரவீன்குமார் , மாநகர காவல் ஆணையாளர் லோகநாதன் , மாநகராட்சி ஆணையாளர் சித்ரா விஜயன் , சோழவந்தான் சட்டமன்ற உறுப்பினர் ஆ.வெங்கடேசன் ஆகியோர் உடன் உள்ளனர்.



## சேலத்தில் புதிய பயணிகள் நிழற்குடை; அருள் எம்.எல்.ஏ. திறந்து வைத்தார்!

சேலம் ஜன 06

சேலம் மேற்கு சட்டமன்றத் தொகுதி, 2 மற்றும் 3வது கோட்டம் காமராஜர்காலனி,அண்ணாநகர் ,அவ்வை நகர், செங்கல்பேட்டை,தெய்வானை நகர், சக்தி நகர்,ஓம் சக்தி நகர்,பனங்காடு, மீனாட்சி நகர்,உதயபுரி காலனி,முகில் நகர்,திரு.வி.க நகர் ஆகியபகுதியில்உள்ளமக்களின்நீண்ட நாள் கோரிக்கைநிறைவேற்றும் வகையில் சேலம் மேற்கு சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து நிதி ஒதுக்கீடு செய்து மயான சுற்றுச்சுவர் மற்றும் பயணிகள் நிழல் கூடம் அமைக்கப்பட்டு

இன்று மேற்கு சட்டமன்ற உறுப்பினர் அருள் திறந்து வைத்தார். இதே போல சித்தனூர்குடோன் பஸ் ஸ்டாப் டி எஸ் கே மண்டபம் அருகில் பயணிகள் நிழல் கூடம் மற்றும் புதுரோடு ரவுண்டான அருகில்பயணிகள்நிழல்கூடம்அமைக்கப்பட்டு இன்று திறந்து வைக்கப்பட்டது. நிகழ்ச்சியில் தேவராஜ், மாவட்ட தலைவர் கோவிந்தன், பகுதி செயலாளர் நடராஜ், மாவட்டத் துணைத் தலைவர் கலைவாணன், கார்த்தி, சரவணன், சுபாஷினி, கிருஷ்ணம்மாள்,21 டிவிஷன் செயலாளர் சம்பத், பாலு, பகுதி துணை வேணுகோபால், வைத் தீஸ்வரன்,ராமன், சென்ன கிருஷ்ணன், மோகன், வெள்ளையன்,ஜோதி, பூபதி, கலைவாணி, குணா, அய்யந்துறை, ஏழுமலை உட்பட பலரும் கலந்து கொண்டனர்.

## தர்மபுரியில் எஸ்.ஐ.ஆர்.பணிகள் விழிப்புணர்வு வாகனம்!

### கலெக்டர் தொடங்கி வைத்தார்!!



தர்மபுரி, ஜன. 6

தர்மபுரி டவுன் பஸ் ஸ்டாண்டில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம்2026 பணிகள் தொடர்பானவிழிப்புணர்வு வாகனத்தை மாவட்ட ஆட்சியரும்,மாவட்ட தேர்தல் அலுவலருமான சதீஸ், தொடங்கி வைத்தார்.பின்னர் அவர் கூறும்போது,

புதிய வாக்காளர் சேர்த்தல், நீக்கம், வாக்காளர் விவரங்கள் திருத்தம், பாகம் மற்றும் முகவரி மாற்றம் உள்ளிட்ட நடவடிக்கைகளின் பொருட்டு தேவையான படிவங்கள் (படிவம் 6, 6A, 6B, 7 மற்றும் 8 மற்றும் உறுதிமொழிப்படிவம்) வைக்கப்பட்டிருக்கும். மேலும், தொடர்புடைய வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள் மற்றும் வாக்குச்சாவடி அமைவிட அலுவலர் ஆகியோர் பணியில் இருப்பார்கள்.

தகுதியுள்ள, தற்போது 18 ஆண்டுகள் வயது நிறைவடைந்த நபர்கள் மற்றும் 01.10.2026ம் தேதிக்குள் 18 ஆண்டுகள் நிறைவடையுள்ள நபர்கள் வாக்காளராக பதிவு செய்துகொள்ள புதிய வாக்காளர் பதிவுக்கான படிவம்6 மற்றும் உறுதிமொழி படிவம் ஆகியவற்றை உரிய ஆவணங்களுடன் பூர்த்தி செய்து முகாம்களில் அளிக்கலாம். பொதுமக்கள் தங்களுடைய இருப்பிடங்களுக்கு அருகில் உள்ள வாக்குச்சாவடிகளில் முகாம் நாட்களில் சென்று வாக்காளர் பட்டியல் சேர்க்கை, நீக்கம், திருத்தம் உள்ளிட்ட நடவடிக்கைகளுக்கு அனுகி பயன் பெறலாம். மேலும், இணைய வழியிலும் https://voters.eci.gov.in/ என்ற இணைய தளத்தில் "New Voters Registration" என்ற இணைய பக்கம் மூலமாகவும் தங்களுடைய விண்ணப்பங்களை அளிக்கலாம். ஏற்கெனவே வாக்காளர் பட்டியலில் இடம் பெற்றுள்ள நபர்கள் மீண்டும் பதிவு செய்து கொள்ள தேவையில்லை. தவறான தகவல் அளித்து வாக்காளராக பதிவு செய்வது தண்டனைக்குறிய குற்றமாகும்.

நிகழ்ச்சியின் போது, தர்மபுரி நகர மன்ற தலைவர் லட்சுமி நாட்டான் மாது, தர்மபுரி ஆர்டிஒ காயத்திரி உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள் உடனிருந்தனர்.

## 957 பயனாளிகளுக்கு இலவச வீட்டு மனை பட்டா!

### அமைச்சர் சக்கரபாணி வழங்கினார்!!

ஒசூர்,ஜன.6

ஒசூர் ஆனந்த் கிராண்ட் பேலஸில் நடைபெற்ற நிகழ்ச்சியில் ஒசூர் பகுதியைச் சேர்ந்த 410 பயனாளிகளுக்கு இலவச வீட்டுமனை பட்டாக்கள், கலைஞர் மகளிர் உரிமைத் தொகை திட்டத்தின் 2ம் கட்டத்தின் கீழ், 650 மகளிர்க்கு உரிமைத் தொகைக்கான வங்கி பற்று அட்டைகளை உணவு மற்றும் உணவுப்பருள் வழங்கல் துறை அமைச்சர்அர.சக்கரபாணி வழங்கினார்.



இதைத் தொடர்ந்து ஒசூர் சார் ஆட்சியர் அலுவலகம் அருகில், ஆர்.சி.சர்ச் பகுதிகளில் செயற்கை நீரூற்றுகள் மற்றும் ராயக்கோட்டை பிரிவு சாலையில் வணக்கம் ஒசூர் பெயர்பலகை ஆகியவற்றை

மாவட்ட ஆட்சித்தலைவர் ச.தினேஷ் குமார், சட்டமன்ற உறுப்பினர்கள் ஒய்.பிரகாஷ் (ஒசூர்), டி.ராமச்சந்திரன் (தளி), ஒசூர் மாநகராட்சி மேயர் எஸ்.ஏ.சத்யா ஆகியோர் முன்னிலையில் திறந்து வைத்தார். நிகழ்ச்சியில்,ஒசூர் மாநகராட்சி ஆணையாளர் முகம்மது ஷபீர் ஆலம், ஒசூர் சார் ஆட்சியர் திருமதி.ஆக்ரிதி சேத்தி, கூட்டுறவு சங்கங்களின் இணைப்பதிவாளர் நடராஜன், மண்டலக்குழு / நிலைக்குழு தலைவர்கள், வட்டாட்சியர்கள் குணசிவா, செல்வி.கங்கை, ரமேஷ், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் முருகன் மற்றும் மாமன்ற உறுப்பினர்கள் முன்னாள் உள்ளாட்சி பிரதிநிதிகள், துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## அரூர் பகுதியில் நடந்த வாகன சோதனையில் ரூ.42 லட்சம் வருவாய்!

அரூர்,ஜன.6

அரூர் மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலகத்தின் எல்லைக்கு உட்பட்ட அரூர் பாப்பிரெட்டிப்பட்டி, பொம்மிடி,கடத்தூர், மற்றும் அதன் சுற்றுவட்டார பகுதிகளில் 2025 ம் ஆண்டு ஜனவரி முதல் டிசம்பர் வரை வட்டாரபோக்குவரத்துஅலுவலர்.சி.க.ஜெயதேவராஜ் தலைமையில் மோட்டார் வாகன ஆய்வாளர்கள் பால சுப்பிரமணியன்,தரணீதர் ஆகியோர் மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் மொத்தம் 3885 வாகனங்களை சோதனை செய்தனர். இவற்றில் 1192 வாகனங்களுக்கு சோதனை அறிக்கைகள் வழங்கப்பட்டன. அதில் காலாண்டு வரி செலுத்தாமல் இயக்குதல், தகுதிச் சான்று,காப்புச்சான்று, புகைச்சான்று புதுப்பிக்காமல் இயக்குதல், அனுமதி சீட்டு இல்லாமல் இயக்குதல் ஆகிய குற்றங்களில் ஈடுபட்ட 185 வாகனங்கள் சிறை பிடிக்கப்பட்டன. விதிகளை மீறி ஆட்களை

ஏற்றி சென்ற 92 சரக்கு வாகனங்களுக்கும், அதிக பாரம் ஏற்றிச்சென்ற 190 வாகனங்களுக்கும், அனுமதிச்சீட்டு இல்லாமல் இயக்கிய 38 வாகனங்களுக்கும், அதிவேகமாக இயக்கப்பட்ட 312 வாகனங்களுக்கும், தகுதிச்சான்று பெறாமல் இயக்கப்பட்ட 120 வாகனங்களுக்கும் அபராதம் விதிக்கப்பட்டது.

இதேபோல் காப்புச்சான்று, புகைச்சான்று இல்லாமல் இயக்கப்பட்ட 540 வாகனங்களுக்கும், சிவப்பு நிற பிரதிபலிப்பான்கள் இல்லாமல் இயக்கப்பட்ட 346 வாகனங்களுக்கும் சிவப்பு எச்சரிக்கை விளக்கு இல்லாமல் இயக்கப்பட்ட 113 வாகனங்களுக்கும் அபராதம் விதிக்கப்பட்டது. ஓட்டுனர் உரிமங்களுக்கு தற்காலிக தடை விபத்துகளில் உயிரிழப்பு ஏற்பட்டதால் 39 பேரின் ஓட்டுனர் உரிமங்களுக்கு தற்காலிக தடை விதிக்கப்பட்டது.

1192 வாகனங்களுக்கு அபராதம் வாகன சோதனையின் மூலமாக அரசுக்கு சாலை வரியாக ரூ.24 லட்சத்து 19 ஆயிரமும் இணக்க கட்டணமாக ரூ.17 லட்சத்து 69 ஆயிரத்து 200ம் என மொத்தம் ரூ. 41 லட்சத்து 88ஆயிரத்து 503 ரூபாய் வசூலிக்கப்பட்டது. வாகனசோதனை மூலம் பல்வேறு குற்றங்களுக்கு இணக்க கட்டணமாக ரூ. 25 லட்சத்து 30 ஆயிரத்து 900 விதிக்கப்பட்டது. 2025ம் ஆண்டு தர்மபுரி வட்டார போக்குவரத்து அலுவலக செயலாக்க பணிகள் மூலம் அரசுக்கு மொத்தம் ரூ.67 லட்சத்து 82ஆயிரத்து 500 வருவாய் ஈட்டப்பட்டுள்ளது.



## நாமக்கல்லில் வக்கீல்கள் சங்க மாநில செயற்குழு கூட்டம்!

### 12-ந் தேதி போராட்டம் நடத்த தீர்மானம்!!

நாமக்கல், ஜன. 6

தமிழ்நாடு – பாண்டிச்சேரி வழக்கறிஞர் சங்கங்களின் மாநில செயற்குழு கூட்டம் நாமக்கல்லில் நடைபெற்றது. சங்க தலைவர் மாரப்பன் தலைமை வகித்தார். கூட்டத்தில் இ ஃபைலிங் முறையை நீதிமன்றங்களில் கொண்டு வந்ததை கண்டித்து வருகிற 18ஆம் தேதி வரை நீதிமன்ற புறக்கணிப்பு போராட்டம் நடைபெறும் எனவும். காணொளி காட்சி மூலம் நீதிமன்றங்களில் சாட்சிகளை விசாரணை செய்ய தமிழக அரசு கொண்டுவந்த அரசாணையை திரும்பப் பெற வலியுறுத்தியும் வருகிற 12 ம் தேதி மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பு போராட்டத்தில் ஈடுபடுவது என்றும் . கட்டாய ஈ ஃபைலிங் முறையை ரத்து செய்ய வேண்டி சென்னை நீதிமன்றத்தில் ரிட் மனு தாக்கல் செய்வது எனவும் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டன. கூட்டத்தில் தமிழகம் முழுவதும் இருந்து வணக்கம் நண்பர்களே ஏராளமான பங்கேற்றனர்.



பொங்கல்பரிசுத்தொகப்பில்ஒருமுழுநீளகரும்புவழங்குவதற்காககூட்டுறவுத்துறையின் சார்பில் தருமபுரி மாவட்டம் கடத்தூர் அருகே கோம்பை கிராமத்தில் கரும்பு கொள்முதல் செய்யும் தோட்டத்தில் கரும்பின் தரம் குறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் ரெ. சதீஸ்பார்வையிட்டு ஆய்வு செய்தார். உடன் கூட்டுறவு சங்கங்களின் இணைப்பதிவாளர் சரவனன், பொது விநியோகத்திட்ட துணைப்பதிவாளர் சுந்தரம் உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள் உள்ளனர்.



## ஈரோட்டில் பா.ஜ.க. விவசாய அணி சார்பில் இயற்கை வேளாண் கண்காட்சி!

### வானதி சீனிவாசன் தொடங்கி வைத்தார்!!

ஈரோடு, ஜன. 06

மஞ்சள் மாநகரமான ஈரோட்டில் பாரதிய ஜனதா கட்சியின் விவசாய அணி சார்பில் நடத்தப்படும் விவசாயிகள் விழிப்புணர்வுமாநாட்டைமுன்னிட்டு,மாபெரும் இயற்கை வேளாண் கண்காட்சி இன்று கோலாகலமாகத் தொடங்கியது. ஈரோடு திண்டல், வில்லரசம்பட்டி பகுதியில் உள்ள லட்சுமி துரைசாமி திருமண மஹால் திடல் எதிரில் நூற்றுக்கும் மேற்பட்ட அரங்குகள் அமைக்கப்பட்டுள்ளன. முழுவதும் விவசாயிகளே நேரடியாகப் பங்கேற்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ள இக்கண்காட்சியில் இயற்கை வேளாண் உற்பத்திப் பொருட்கள், பாரம்பரிய உணவு வகைகள் மற்றும் நவீன வேளாண் கருவிகள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. நடைபெற்ற தொடக்க விழாவில் பாஜக தேசிய மகளிர் அணி தலைவரும் சட்டமன்ற உறுப்பினருமான வானதி சீனிவாசன் குத்துவிளக்கேற்றி கண்காட்சியைத் தொடங்கி வைத்தார். விவசாய அணி மாநிலதலைவர்ஜி.கே.நாகராஜ், மொடக்குறிச்சி சட்டமன்ற உறுப்பினர் டாக்டர்சி. சரஸ்வதி ஆகியோர் முன்னிலை வகித்தனர். கண்காட்சி அரங்குகளைப் பார்வையிட்ட தலைவர்கள், இயற்கை விவசாயத்தின் அவசியம் குறித்தும் விவசாயிகளின் நேரடி விற்பனை வாய்ப்புகள் குறித்தும் விரிவாகக் கலந்துரையாடினர்.

இந்நிகழ்வில் ஈரோடு தெற்கு மாவட்ட தலைவர் எஸ்.எம்.செந்தில், விவசாய அணி மாநில செயலாளர் பன்னீர்செல்வம், மாவட்ட தலைவர் சந்திரசேகர், மாவட்ட செயலாளர் கணேசன், தன்னார்வ தொண்டு நிறுவனப் பிரிவு மாநில செயலாளர் கிருத்திகா சிவகுமார் உள்ளிட்ட கட்சி நிர்வாகிகள் மற்றும் ஏராளமான விவசாயிகள், பொதுமக்கள் கலந்து கொண்டனர். விவசாய மைய வளர்ச்சி தேசத்தின் வளர்ச்சி என்ற கொள்கையை முன்வைத்து, இயற்கைவேளாண்மைக்கு ஊக்கமளிக்கவும் கிராமிய பொருளாதாரத்தை மேம்படுத்தவும் இந்த கண்காட்சி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.



## சேலத்தில் தமிழ்நாடு திருவள்ளுவர் மக்கள் கூட்டமைப்பு சார்பில் ஆலோசனைக் கூட்டம்!

சேலம், ஜன.6

சேலத்தில் தமிழ்நாடு திருவள்ளுவர் மக்கள் கூட்டமைப்பு சார்பில், ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் செய்தியாளர்களை சந்தித்த கூட்டமைப்பின் தலைவர் அருண்கோபால் கூறும்போது, கன்னியாகுமரியில் அமைக்கப்பட்டுள்ள அய்யல் திருவள்ளுவர் சிலையை முறையாக பராமரித்து, விவேகானந்தர் மண்டபத்திலிருந்து, திருவள்ளுவர் சிலை வரை, கண்ணாடி பாலம் அமைத்துக் கொடுத்த தமிழக முதல்வருக்கு நன்றி தெரிவிப்பதாகவும், தமிழகத்தில் மட்டும் தங்கள் கூட்டமைப்பு சார்பில் 10 லட்சம் நபர்கள் உறுப்பினர்களாக உள்ளதாகவும், வருகின்ற சட்டமன்ற தேர்தலில், தங்களது கூட்டமைப்புக்கு ஆதரவாக, எந்த அரசியல் அமைப்பினர் செயல் திட்டங்களை அறிவிக்கிறார்களோ, அவர்களுக்கு வரும் தேர்தலில் தங்களது முழு ஆதரவையும் அளிப்பதாக, தமிழ்நாடு திருவள்ளுவர் மக்கள் கூட்டமைப்பின் தலைவர் அருண்கோபால் தெரிவித்தார்.

## கிருஷ்ணகிரியில் வெவ்வேறு சம்பவங்களில் 2 மாணவிகள் தற்கொலை!

கிருஷ்ணகிரி, ஜன.6

கிருஷ்ணகிரி அடுத்த பாலேப்பள்ளியை சேர்ந்தவர் அமிர்தா(17). கந்திகுப்பம் அரசு மேல்நிலைப்பள்ளியில் பிளஸ்2 படித்து வந்தார். இவர், இதயத்தில் சிறு பிரச்னை இருந்ததாக கூறப்படுகிறது.

இதற்காக பெங்களூருவில் உள்ள ஒரு தனியார் மருத்துவமனையில் கடந்த, 5 ஆண்டுகளாக சிகிச்சை பெற்று வந்துள்ளார்.இருப்பினும்நோய்சரியாகவில்லை. விரக்தியில் இருந்த இவர், வீட்டில் தூக்கிட்டு தற்கொலை செய்து கொண்டார். கந்திகுப்பம் போலீசார் விசாரிக்கின்றனர். அதேபோல் மற்றொரு மாணவி தற்கொலை செய்து கொண்ட சம்பவமும் நடந்துள்ளது. காவேரிப்பட்டணம் அடுத்த மலைபையூரை சேர்ந்தவர் கோகிலா(17), பொம்மிடியில் உள்ள தனியார் பாலிடெக்னிக் கல்லூரியில் இரண்டாம் ஆண்டு படித்து வந்தார். விடுமுறைக்கு ஊருக்கு வந்துள்ளார்.

கடந்த, 30ந் தேதி, வீட்டு வேலை எதுவும் செய்யவில்லையென கோகிலாவை, அவரது தாய் திட்டியுள்ளார்.

இதில், கோபமடைந்த கோகிலா விஷம் குடித்துள்ளார். அவரை மீட்டு தர்மபுரி அரசு மருத்துவமனையில் சேர்த்த நிலையில் சிகிச்சை பலனின்றி இறந்தார்.

இது குறித்து காவேரிப்பட்டணம் போலீசார் விசாரிக்கின்றனர்.



தருமபுரி மாவட்டம், பென்னாகரம் சட்ட மன்ற தொகுதிக்குட்பட்ட ஆலமரத்துப்படி, ஊ.ஒ. நடுநிலைப்பள்ளியில் உள்ள வாக்குச்சாவடி மையங்களில் வாக்காளர் பட்டியல் சிறப்புதீவிரதிருத்தம்சிறப்பு முகாம்கள்நடைபெற்று வருவதை மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் ரெ.சதீஸ் பார்வையிட்டு, ஆய்வு மேற்கொண்டார்கள்

# பர்கூர் அருகே கடத்தப்பட்ட கிரானைட் அதிபர் பெங்களூரில் மீட்பு!

## பெண் உள்பட 5 பேர் கைது!!

கிருஷ்ணகிரி, ஜன. 6

கிருஷ்ணகிரி மாவட்டம் பர்கூர் அருகே கடத்தப்பட்ட கிரானைட் அதிபர் பெங்களூரில் மீட்கப்பட்டு, பெண் உள்பட 5 பேரை போலீசார் கைது செய்தனர்.

கிருஷ்ணகிரி மாவட்டம் பர்கூர் அருகே உள்ள ஏ.நாகமங்கலத்தை சேர்ந்தவர் சுரேஷ்குமார்(38). இவர் பர்கூர் அடுத்த ஜெகதேவி அருகே கிரானைட் தொழிற்சாலை நடத்தி வருகிறார். இவரது மனைவி கஜலட்சுமி. இந்நிலையில் கடந்த 31ம் தேதிமுதல்சுரேஷ்குமாரை காணவில்லை. அவரை மனைவி தேடி பார்த்தார். ஆனாலும் கிடைக்கவில்லை. இதனிடையே நேற்று முன்தினம் கஜலட்சுமியை தொடர்பு கொண்ட சுரேஷ்குமார் தன்னை பண விவகாரத்தில் கடத்தி வைத்துள்ளதாக தெரிவித்தார். இதையடுத்து கஜலட்சுமி நேற்று முன்தினம் பர்கூர் போலீசில் புகார் செய்தார். அதன் பேரில் போலீஸ் இன்ஸ்பெக்டர் இளவரசன் மற்றும் போலீசார் விசாரணை நடத்தினர்.



அதில் கிரானைட் அதிபர்சுரேஷ்குமார்,சென்னை குரோம்பேட்டையை சேர்ந்த ரம்யா(26) என்பவருடன் அடிக்கடி பேசி வந்தது தெரியவந்தது. அதைத் தொடர்ந்து போலீசார் சுரேஷ்குமாரின் செல்போன் டவர் லொகேஷன் எந்த பகுதியில் உள்ளது என பார்த்தனர்.

அதில் சுரேஷ்குமாரின் செல்போன் பெங்களூர் தனியார் ஓட்டல் பகுதியில் பயன்படுத்தப்பட்டது தெரிய வந்தது.

இதையடுத்து நேற்று அங்கு சென்ற பர்கூர் போலீசார்,சுரேஷ்குமாரை அதிரடியாக மீட்டனர். அவரை கடத்தியதாக சென்னை குரோம்பேட்டையை சேர்ந்த ரம்யா(26), மயிலாடுதுறை மாவட்டம் அரசூரைசேர்ந்தலெனின்(43), சென்னை ஆவடி பிரபு(37), திருவள்ளூர் மாவட்டம்கும்மிடிபூண்டி பாபு(38), சென்னை வில்லிவாக்கம் ராஜேஷ்(42) ஆகிய 5 பேரைகைது செய்தனர்.

அவர்களிடம் போலீசார் நடத்திய விசாரணையில், கிரானைட் அதிபர் சுரேஷ்குமாருடன், ரம்யா அடிக்கடி போனில்பேசி வந்துள்ளார். சுரேஷ்குமாரின் வங்கி கணக்குக்கு தொகையை அனுப்பி அதை எடுத்து கொடுத்தால் அதற்கு கமிஷன் தரப்படும் என பேசப்பட்டுள்ளது. அதன்படி சுரேஷ்குமாரின் வங்கி கணக்கிற்கு தொகையை பலர் அனுப்பி அதை சுரேஷ்குமார் எடுத்து கொடுத்துள்ளார். அதற்காக கமிஷனும் பெற்று வந்துள்ளார்.

இந்நிலையில் கடந்த 31ம் தேதி பர்கூரில் உள்ள தேசியமயமாக்கப்பட்ட வங்கி ஒன்றில் கணக்கு வைத்துள்ள சுரேஷ்குமாரின் வங்கி கணக்கிற்கு ரூ. 28 லட்சத்து 80 ஆயிரம் வந்துள்ளது.

அந்த பணத்தை எடுத்து தருமாறு ரம்யா கூறியுள்ளார். அதை எடுத்து தருகிறேன். கிருஷ்ணகிரி வருமாறு சுரேஷ்குமார் கூறியுள்ளார். அங்கு வங்கியில்ரூ.1 லட்சம் மட்டுமே எடுக்க முடியும் என்றும், எந்த வங்கி கணக்கிற்கு வந்ததோ அங்கு சென்றால் தான் மற்ற தொகையை எடுக்க முடியும் என கூறியுள்ளனர். இதையடுத்து ரம்யாவை அழைத்துக் கொண்டு சுரேஷ்குமார் பர்கூர் வங்கிக்கு சென்றுள்ளார். அங்குஜி.எஸ்.டி.நிலுவை உள்ளிட்டவற்றை காரணம் காட்டி சுரேஷ்குமாரின் வங்கி கணக்கு முடக்கி வைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. இதனால் பணத்தைஎடுக்கமுடியாத ஆத்திரத்தில் ரம்யா மற்றும் அவருடைய கூட்டாளிகள் சேர்ந்து சுரேஷ்குமாரை காரில் பெங்களூருக்கு கடத்தி சென்றதும், அவரது மனைவியை மிரட்டி அந்த பணத்தைபறிக்கலாம் என திட்டம் போட்டதும் விசாரணையில் தெரிய வந்துள்ளது. மீட்கப்பட்ட சுரேஷ்குமாரின்வங்கிகணக்கிற்கு குடியாத்தம் பகுதியை சேர்ந்த ஜெகன் என்பவர் தான் ரூ.28.80 லட்சம் பணத்தை அனுப்பியுள்ளதாக கூறப்படுகிறது. இதில் தொடர்புடையவர்கள் யார்?

பணத்தை எடுத்து கொடுக்ககமிஷன்பெறும் இவர்களுக்கு ஹவாலா கும்பலுடன் தொடர்பு உள்ளதா? என பர்கூர் போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

மேலும் சுரேஷ்குமாரின் வங்கி கணக்கிற்கு இதே போல இதற்கு முன்பு பணம் வந்துள்ளதா என்றும் சைபர் கிரைம் போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

பர்கூரில் பணவிவகாரத்தில் கிரானைட் அதிபர் கடத்தப்பட்ட சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

# திருப்பத்தூர் மாவட்டத்தில் கறிக்கோழி பண்ணை விவசாயிகள் உற்பத்தி நிறுத்த போராட்ட அறிவிப்பு!



வாணியம்பாடி ஜன.6

திருப்பத்தூர் மாவட்டம் முழுவதும் ஏராளமான கோழிப்பண்ணைகள்செயல்பட்டு வருகின்றன. இந்த கோழி பண்ணைகளில் தேங்காய் மஞ்சு, மருந்து, மின்சாரம் உள்ளிட்ட மூலப் பொருட்கள் விலையும், கூலி உயர்வு, பராமரிப்பு செலவுகள் அதிகரித்ததை தொடர்ந்து, கறிக்கோழி உற்பத்தி விலையை உயர்த்தி தரக்கோரி, தமிழக முழுவதும் பல்லாயிரக்கணக்கான கோழிப்பண்ணை விவசாயிகள் உற்பத்தி நிறுத்த போராட்டம் மேற்கொண்டு வருகிறார்கள்.

இந்த ஆலோசனை கூட்டத்தின் முடிவில், கறிக்கோழி உற்பத்தி கூலி கிலோ ₹6.50 ரூபாயில் இருந்து பண்ணை கோழி ₹20, ரூபாய் நாட்டுக்கோழி ₹25 ரூபாய், காடை ஒன்றுக்கு ₹7 ரூபாய் உற்பத்தி கூலியாக உயர்த்தி கொடுக்க வேண்டும், இந்த கோரிக்கைகளை நிறைவேற்றும் வரை கோழி உற்பத்தியை நிறுத்துவது, புதிதாக கோழிக்குஞ்சுகளை பண்ணைகளுக்கு இறக்குவதை நிறுத்துவது என்று ஒரு மனதாக முடிவு செய்யப்பட்டுள்ளது . இது குறித்து தமிழக விவசாயிகள் பாதுகாப்பு சங்கத்தின் திருப்பத்தூர் மாவட்ட செயலாளர் ராதாகிருஷ்ணன் கூறும்போது, மூலப் பொருட்கள் விலை மிகக் கடுமையாக உயர்ந்துள்ளது உற்பத்தி செலவு அதிகரித்து உள்ளது. ஆனால், உற்பத்திக் கூலி மட்டும் இன்னும் ₹6.50 ரூபாயாக இருக்கிறது அந்த பணமும் விவசாயிகளுக்கு முழுதாக கிடைப்ப தில்லை, பல்வேறு காரணங்களை சொல்லி அந்த விலையையும் மிகக் குறைவாக கொடுக்கிறார்கள். மேலும், ஏற்படும் இழப்புகளுக்கும் கோழிப் பண்ணை உரிமையாளர்களே பொறுப்பேற்க வேண்டிய சூழ்நிலை உள்ளது. கோழிகள் இறந்தாலும் உற்பத்தியாளர்களே பொறுப்பு எடுக்க வேண்டும் என்ற சூழ்நிலை உள்ளது என்று கூறினார்.

இந்தக்கூட்டத்தில்தமிழகவிவசாயிகள் பாதுகாப்பு சங்க மாநில ஒருங்கிணைப்பாளர் வடிவேல் சுப்பிர மணியன், மாவட்ட தலைவர் லட்சுமணன், பொருளாளர் மகேந்திரன், நாட்றம்பள்ளி ஒன்றிய செயலாளர் வேணு கோபால், கறிக்கோழி பண்ணை உரிமையாளர்கள் நாகபூஷணம், ராமமூர்த்தி, நாராயணசாமி, ஜெயக்குமார், ராதாகிருஷ்ணன், பூபதி, முருகன், மகேஷ், விவேகானந்தன், முரளி, பழனி உட்பட 150க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.



# சென்னை சர்வதேச விமான நிலையத்தில் நப்பா டோரியின் புதிய ஸ்டோர் திறப்பு!

சென்னை,ஜன.6

நப்பா டோரி, காலமற்ற கைவினைத்திறன் நவீன வடிவமைப்பும் ஒன்றிணையும் தனது தத்துவத்தை தொடர்ந்து, சென்னை சர்வதேச விமான நிலையத்தின் முனையம்–2, சர்வதேச பாதுகாப்பு தடுப்பு பகுதியில் (ஸ்டோர் எண் 03) புதிய ஸ்டோர் தொடங்கியுள்ளது. பயணிகளுக்காக உருவாக்கப்பட்ட இந்த ஸ்டோர், பயணத்தின் வேகமான ஓட்டத்துக்கிடையில் அமைதியான ஓய்வு தருணத்தை வழங்குகிறது.

பாரம்பரிய கைவினைக் கலையும் நவீன எளிமை அழகியலையும் இணைக்கும் வகையில் வடிவமைக்கப்பட்ட இந்த இடம், பயணத்தை ஒரு அனுபவமாக மாற்றுகிறது. இங்கு நீடித்த பயணப் பொருட்களை, செயல்பாட்டு ஆக்சஸெரீகள், நுண்ணறிந்த தோல் உபகரணங்கள் மற்றும் நோட்டுப் புத்தகங்கள் உள்ளிட்ட தயாரிப்புகள் கவனமாகத் தேர்ந்தெடுத்து வழங்கப்படுகின்றன. ஒவ்வொரு தயாரிப்பிலும் நப்பா டோரியின் சிந்தனையுடனான வடிவமைப்பும் நீடித்த கைவினைத்திறன் வெளிப்படுகிறது.

பயன்பாடும் கலை அழகும் ஒருங்கிணையும் இந்த புதிய ஸ்டோர், பயணத்தின் இயக்கத்தையும், காலமற்ற அழகியலையும் ஒருசேர கொண்டாடுகிறது.



ஆம்பூர் அருகே தேசிய நெடுஞ்சாலையில் மேம்பாளதுடன் சப்வே அமைத்து தர வலியுறுத்தி கடைகளை அடைத்து பகுதி மக்கள் கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டம் நடத்தினர்.



# சேலம் கருங்கல்பட்டி ராமலிங்க சௌடேஸ்வரி அம்மன் கோவில் திருவிழா!

## 15–ந் தேதி தொடங்குகிறது!!

சேலம் ஜன.6

சேலம் கருங்கல்பட்டி ராமலிங்க சௌடேஸ்வரி அம்மன் கோவில் திருவிழா வருகிற 15ஆம் தேதி தொடங்குகிறது.இதையொட்டி கடந்த டிசம்பர் மாதம் 1ந் தேதி முகூர்த்தக்கால் நடப்பட்டது. 25ந் தேதி பண்டாரம் பெற்று வரும் நிகழ்வும், 31ந் தேதி மஞ்சள் துண்டு பெற்று வரும் நிகழ்வும் நடைபெற்றது.

அதனைத் தொடர்ந்து இன்று கருங்கல்பட்டி 2வது தெருவில் உள்ள காயத்ரி, விஷ்ணு கார்த்திகேயன் ஆகியோரது வீட்டில் இருந்து அச்சு வெல்லம் பெறும் நிகழ்ச்சி நடைபெற்றது. தொடர்ந்து அம்மன் கொலு மண்டப கோட்டைக்கும் மற்றும் பிரசாதத்திற்கும் அச்சு வெல்லம் பெற்று ஊர்வலமாக வந்து திருவிழா திடலை வந்தடைந்தனர். இதில் திரளான பக்தர்கள் பங்கேற்றனர்.

இந்த நிகழ்வில் கோவில் விழா தலைவர் கந்தசாமி, செயலாளர் சேகர், பொருளாளர் வெங்கடேசன், கவுரவத் தலைவர் அண்ணாதுரை, கவுரவ ஆலோசகர்கள் சரவணன், சீனிவாசன், இணைத்தலைவர்கள் ஒடெக்ஸ் இளங்கோவன்,கல்லங்காடு சரவணன், இணைச்செயலாளர் சங்கர் உள்பட பலர் பங்கேற்றனர்.

## பர்கூர் அருகே

# 3 பகுதி நேர ரேஷன் கடைகள்!

## அமைச்சர் திறந்து வைத்தார்!!

கிருஷ்ணகிரி,ஜன.6

பர்கூர் பழைய பஸ் நிலையம் அருகில் பர்கூர் நகர கூட்டுறவு வங்கி கிளை மற்றும் குருப ரவலசை, நடூர், கோனேரிக்குப்பம் ஆகிய 3 பகுதி நேர ரேஷன் கடைகளை அமைச்சர் சக்கரபாணி தொடங்கி வைத்தார். கலெக்டர் தினேஷ்குமார், மதியழகன் எம்.எல்.ஏ. ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

தொடர்ந்து அமைச்சர் பேசும் போது இந்த 3 புதிய பகுதி நேர ரேஷன் க டை க ள் திறக்கப்பட்டதின் மூலம் 483 ரேஷன்கார்டுதாரர்கள் பயன் பெறுவார்கள் என்றார். தொடர்ந்து கிருஷ்ணகிரி நகர கூட்டுறவு வங்கி பர்கூர் கிளையை திறந்து வைத்த அமைச்சர், பயனாளிகளுக்கு கடன் உதவிகளை வழங்கினார். இந்த நிகழ்ச்சியில் கூட்டுறவு சங்கங்களின் இணை பதிவாளர் நடராஜன், நகர கூட்டுறவு வங்கி மேலாண்மை இயக்குனர் பாலமுருகன், பொது மேலாளர் தங்கவேலு, பர்கூர் பேரூராட்சி தலைவர் சந்தோஷகுமார், தாசில்தார் சின்னசாமி, வட்ட வழங்கல் அலுவலர்செந்தில் உள்பட பலர் கலந்து காண்டனர்.



## பாலக்கோடு அருகே

# பிறந்து 27 நாட்களே ஆன பெண் குழந்தை திடீர் சாவு!

பாலக்கோடு, ஜன.6

தர்மபுரி மாவட்டம், பாலக்கோடு மாக்கான் கொட்டாய் பகுதியைச்சேர்ந்தவர்சண்முகம்(41). இவர்பாலக்கோடு பாலிடெக்னிக் கல்லூரியில் ஆய்வக உதவியாளராக பணியாற்றி வருகிறார்.இவருக்கு திருமணமாகி ஏற்கனவே ஒரு பெண் குழந்தை உள்ளது. இந்நிலையில், இவரது மனைவி மீண்டும் கர்ப்பமடைந்தார். அவருக்கு கடந்த – 7ம் தேதி, குறை பிரசவத்தில் பெண்குழந்தைஅறுவை சிகிச்சைமூலம் பிறந்தது. நேற்று முன்தினம் வீட்டில் குழந்தைக்கு பால் கொடுத்த போது திடீரெனவாய்மற்றும்மூக்கு வழியாகபால் வெளியே வந்துள்ளது. அதனைக் கண்டு அதிர்ச்சிக்குள்ளான குடும்பத்தினர் உடனடியாக பாலக்கோடு அரசு மருத்துவமனைக்கு குழந்தையை கொண்டு சென்றனர். அங்கிருந்த மருத்துவர்கள் பரிசோதித்து பார்த்து குழந்தை இறந்து விட்டதாக தெரிவித்தனர்.

## பொது அறிவிப்பு

எனது கட்சிக்காரராகிய திருநெல்வேலி மாவட்டம் கதவு எண் 9/231வடக்குக்தெரு,சொக்கலிங்கபுரம்,முதுமொத்தான்மொழி,திசையன்விளை 627654 என்ற முகவரியில் வசிக்கும் சுபாஷ் என்பவரின் முறையான தகவலின் பேரில் தெரிவிப்பது யாதெனில்.

எனது கட்சிக்காரர் திசையன்விளை சார்பதிவகத்தில் 3853/2025 பதிவு செய்யப்பட்ட செட்டில்மென்ட் பத்திரம் சர்வே எண் 132/36க்கான சுமார் 7 சென்ட் சொத்தையும்,3335/2015 , கிரையபத்திரம் சர்வே எண்:132/32 (3சென்ட்)அனுபவித்து வருகின்றார். மேற்படி சொத்தை ஈடுகெட்டி எனது கட்சிக்காரர் Veritas Finance Ltd ல் கடன் கோரும்போது சொத்து சம்மந்தமான ஆவணங்கள் சரிபார்க்கப்பட்டது. அப்போதுதன் சொத்திற்கு சம்மந்தமான மூல ஆவணம் 1271/2015 கிரய பத்திரம்,1223/2001, செட்டில்மென்ட் பத்திரம் ஆகியவற்றை எனது கட்சிக்காரர் ஜெராக்ஸ் எடுப்பதற்காக கடந்த 15/12/2025 அன்று பேருந்தில் சென்றபோது அவரிடமிருந்து சொத்திற்கு சம்மந்தமான மேற்படி மூலஆவணங்கள் தொலைந்தது தெரியவந்தது. ஆகவே மேற்படி காணாமல் போன அசல் மூலஆவணங்களை எடுத்து தன்வசம் வைத்திருப்பவரோ அல்லது சொத்தின் பெயரில் யானுமே உரிமையோ, ஆட்சேபனையோ பின்தொடர்ச்சியோ இருந்தாலோ நாளை முதல் 15 நாட்களுக்குள் எழுத்து மூலமாக தக்க ஆதாரத்துடன் கீழ்க்கண்ட முகவரிக்கு தெரியப்படுத்தவும். அதன்பின் வரும் எந்தவிதமான ஆட்சியேபனையும் எனது கட்சிக்காரரை எந்த வில்லங்கத்திற்கும் கட்டுபடுத்தாது என்பதனை இந்த பொது அறிவிப்பின் மூலம் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**M. MARIA SINGAM .**

M. A. LLB , ADVOCATE/NOTARY PUBLIC
GO. Ms. No. 202/17, 2.No. 328/84
24,LAW CHAMBER, NAGERCOIL1



# ராதாபுரம் தொகுதிக்குட்பட்ட வாக்குச்சாவடி முகாம்கள்!

## முன்னாள் எம்பி. சௌந்தர்ராஜன் ஆய்வு!!

ராதாபுரம்,ஜன.6

ராதாபுரம் தொகுதிக்குட்பட்ட வாக்குச்சாவடி முகாம்களை முன்னாள் எம்பி. சௌந்தர்ராஜன் ஆய்வு மேற்கொண்டார்

தமிழகம் முழுவதும் வாக்குச்சாவடிகள் தோறும் வாக்காளர் சேர்ப்பு சிறப்பு முகாம் நடைபெற்றது.நெல்லை மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலும் வரைவு வாக்காளர் பட்டியலில் பெயர் இடம் பெறாதவர்கள் இந்த சிறப்பு முகாம்களில் விண்ணப்பித்து வருகின்றனர்.

ராதாபுரம் தொகுதிக்குட்பட்ட பணகுடி, மற்றும் வள்ளியூர் தெற்கு ஒன்றியத்திற்குட்பட்ட பகுதிகளில் நடைபெற்று வரும் வாக்குச்சாவடி வாக்காளர் சிறப்பு முகாம்களை முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும், அதிமுக நெல்லை புறநகர் மாவட்ட பொருளாளருமான சௌந்தர்ராஜன் ஆய்வு மேற்கொண்டார்.

இந்த ஆய்வின்போது, வாக்காளர் சேர்த்தல், பெயர் திருத்தம், முகவரி மாற்றம் உள்ளிட்ட பணிகள் முறையாக நடைபெறுகிறதா. !என்பதையும், பொதுமக்களுக்கு தேவையான வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளதா என்பதும் ஆய்வு செய்யப்பட்டது.

மேலும், முகாம்களில் பங்கேற்கும் பொதுமக்களுக்கு உரிய வழிகாட்டுதல்களை வழங்கி, அதிகாரிகளிடம் தேவையான ஆலோசனைகளையும் வழங்கினர். இந்த நிகழ்வின் போது அதிமுக நிர்வாகிகள் வள்ளியூர் தெற்கு ஒன்றிய செயலாளர் பால்துரை, பணகுடி நகரச் செயலாளர் லாரான்ஸ், மாவட்ட எம்ஜிஆர் மன்ற துணைத் தலைவர் இளைய பெருமாள், எம்ஜிஆர் மன்ற இணை செயலாளர் கைலாசம், கிளை செயலாளர் செல்வராஜ் ஆகியோர் கலந்து கொண்டனர்.